# 19 வெண்ணிலாவே!

சங்ககாலம் தொடக்கம் இன்றுவரை வெண்ணிலவைப் பொருளாகக் கொண்டு பாடல்கள் பாடப்பட்டுள்ளன. அந்த வகையில் மகாகவி பாரதியாரும், வெண்ணிலவே என்ற தலைப்பில் பாடியுள்ளார். சினிமாவில் அதிகளவு நிலாப்பாடல்கள் இடம்பெற்றுள்ளன. எம். ஆதம்லெவ்வை அவர்களின் ''முற்றத்து மல்லிகை'' என்னும் கவிதை நூலில் இடம் பெற்றது இப்பாடல். இவர் கிழக்கு மாகாணத்தில் பொத்துவில்லைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.



விண்ணில் மின்னும் மீன்களிடை
விளங்கும் நல்ல வெண்ணிலவே!
மண்ணில் மக்கள் மகிழ முழு
மதியாய் என்றும் வாராயோ?

நிலவே நீயும் நீள்வானில்
நிலவுவதால் நிலவென் றாரோ?
உலகோர் உவக்க ஒளிதந்து
உலவும் உனக்கேன் உருமாற்றம்?

வழியில் உன்னைக் கார்மேகம்
        வந்தே மறைப்பது, அநியாயம்!
எழில்மிகு தண்மதி உன்மீது
        எரிச்சல் ஏன்தான் கொண்டதுவோ?

நல்லது செய்யவேண்டுமென
        நாடிச் சேவை செய்வார்க்குத்
தொல்லை துன்பம் தடைஎல்லாம்
        தோன்றும்; அதற்கு நீ உவமை!

**எம். ஆதம்லெவ்வை.**
**'முற்றத்து மல்லிகை'**

**அரும்பதங்கள்**

| | | |
|---|---|---|
| மீன் | - | நட்சத்திரம் |
| மதி | - | பூரணை |
| உவக்க | - | சந்தோஷமடைய |
| கார்மேகம் | - | மழை மேகம்/ கறுப்பு மேகம் |
| எழில் மிகு | - | அழகுமிகுந்த |

## கிரகித்தல் பயிற்சி

1. விண்ணில் எதற்கிடையில் விளங்கும் வெண்ணிலவு என்று கூறப்படுகின்றது?
2. மண்ணில் மக்கள் மகிழ எவ்வாறு வாராயோ என்று சொல்லப் படுகின்றது?
3. நிலவென்று பெயர்வரக் காரணம் என்னவென்று கூறப்படுகின்றது?
4. வெண்ணிலவை மறைப்பது எது?
5. தண்மதி என்பதன் கருத்து யாது?
6. நிலவை எதற்கு உவமையாகச் சொல்லப்படுகிறது?

## மொழித்திறன் விருத்திச் செயற்பாடு

1. வெண்ணிலவு பற்றிப் பாடலொன்றை எழுதுக.
2. வெண்ணிலவுப் பாட்டை இராகத்தோடு பாடுக.
3. நிலவைப் பற்றிப் பாடிய புலவர்களின் பாடல் இரண்டைத் தேடித் தொகுக்குக.

# கலைச்சொற்கள்

வேற்றுமொழிகளில் அமைந்த அதிக சொற்பிரயோகங்களுக்கான தமிழ்ச் சொற்கள் அவ்வப்போது உருவாக்கப்பட்டு வருகின்றன. அவை கலைச் சொற்கள் எனப்படும்.

இன்றைய உலகில் துரிதமாக ஏற்பட்டுவரும் அறிவியல் வளர்ச்சியின் காரணமாக நாம் எண்ணற்ற தொழிநுட்ப சாதனங்களை உபயோகப்படுத்துகின்றோம். அறிவியல், தொழிநுட்ப வளர்ச்சி களோடு சார்ந்து பல தேசங்களின் கலாசார, பொருளாதார, அரசியல் விடயங்களையும் அறிந்து கொள்கிறோம். இவ்வாறான வேளைகளில் பல புதிய சொற்பிரயோகங்களைச் சந்திக்கிறோம். பெரும்பாலும் வேற்று மொழிகளில் அமைந்த இச்சொற் பிரயோகங்களுக்கான தமிழ்ச் சொற்களும் அவ்வப்போது தமிழிலும் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவை கலைச்சொற்கள் எனப்படும். இவைகளை நீங்கள் தெரிந்து பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பது உங்கள் மொழிவளத்தை விருத்தி செய்யும். உதாரணத்திற்காக சில கலைச்சொற்கள் கீழே தரப்பட்டுள்ளன:-

| | |
|---|---|
| Computer | - கணினி |
| Data | - தரவு |
| Disk | - இறுவட்டு, அடர்தகடு |
| E-mail | - மின்னஞ்சல் |
| Exchange | - பரிமாற்றம் |
| Fax | - தொலைநகல் |

Format - வடிவமைப்பு
Information - தகவல்
Internet - இணையம்
Memory - நினைவகம்
Media - ஊடகம்
Multimedia - பல்லூடகம்
Network - வலையமைப்பு
Web Page - வலைப்பக்கம்
Data Base - தரவுத்தளம்
FM - பண்பலை
Museum - அருங்காட்சியகம்
Digital - எண்மானம்
Download - பதிவிறக்கம்
Key Board - விசைப்பலகை
Remote Control - கட்டுப்படுத்தி
Password - கடவுச் சொல்

**செயற்பாடு**

1. நடைமுறையிலுள்ள பத்துக் கலைச்சொற்களை இனங்கண்டு எழுதுக.

2. கீழே தரப்படும் கலைச்சொற்களுக்கு நிகரான ஆங்கில மொழிச் சொற்களை எழுதுக.
    ★ சுட்டி
    ★ எழுத்துரு
    ★ வன்தகடு
    ★ உலாவி
    ★ கோப்பு

3. ''கணினியும் அதன் பயன்பாடும்'' என்ற தலைப்பில் ஐம்பது சொற்கள் கொண்ட கட்டுரை எழுதி, அதில் பயன்படுத்தப்பட்ட கலைச் சொற்களை அட்டவணைப்படுத்துக.